[25th October 1971

அண்ணாமலைப் பல்கலைக் கழகம்

திரு. ஜி. சுவாமிநாதன் (திரு. வி. ஈஸ்வரமூர்த்தி சார்பில்): மாண்புமிகு கல்வி—உள்ளாட்சிநிர்வாக அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப்பதிலளிக்க வேண்டுகிறேன்:

(அ) வருவாய்க் கோட்ட அதிகாரியினது பணி அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் 1971 பிப்ரவரி 3-ஆம் நாள் அளவில் வேண்டப் பட்டதா?

(இ) ஆமெனில், அதன் விவரங்கள் யாவை?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: (அ) ஆம்.

(இ) 3—2—1971 அன்று மாலை 6-30 மணிக்கு அண்ணாமலை பல்கலைக் கழக துணைவேந்தரிடமிருந்து மாணவர்களிடையே அமைதியின்மையை ஒட்ட ஏற்பட்ட சட்ட ஒழுங்கு பிரச்சினையைக் கவனிப்பதற்கு பல்கலைக் கழக வட்டாரத்திற்கு வரும்படி சிதம் பரம் கோட்ட ஆட்சியாளருக்கு ஒரு விண்ணப்பம் வந்தது B.Ed. பிரிவு மாணவர்கள் அப்பிரிவைச் சேர்ந்த விரிவுரையாளரை வேலை நீக்கம் செய்யவேண்டும் என்று கிளர்ச்சி செய்தனர்.

Book Fair

* 29 Q.—Thiru V. ISVARMURTI: Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(*a*) whether any book fair was conducted in Madras City during the month of January, 1971;

(*b*) whether the Government have participated at the fair; and

(*c*) if so, the details thereof?

புத்தகக் கண்காட்சி

திரு. வி. ஈஸ்வரமூர்த்தி: மாண்புமிகு கல்வி—உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்:

(அ) 1971 ஆம் ஆண்டு ஜனவரித் திங்களில் சென்னை மாநகரில் புத்தகக் கண்காட்சி ஏதேனும் நடத்தப்பட்டதா?

(இ) அப்பொருட் காட்சியில் அரசு பங்கெடுத்துக் கொண்டதா?

(உ) ஆம் எனில், அதன் விவரங்கள் யாவை?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: (அ) ஆம்

(இ) ஆம்.

(உ) தமிழ்நாடு பாடநூல் வெளியீட்டுக் கழகத்தின், கல்லூரிப் பாடநூல் வெளியிடும் பிரிவு, சென்னை பல்கலைக் கழகத் தேர்வு மண்டபத்திற்கருகில் வென்லாக் தோட்டத்தில் 29—12—1970

முதல் 15—1—1971 வரை தேசிய புத்தக வெளியீட்டு நிறுவனம் நடத்திய புத்தகக் கண்காட்சியில் கலந்துகொண்டது. தமிழ்நாடு பாடநூல் வெளியீட்டுக் கழகம் வெளியிட்ட 150 வெளியீட்டு நகல்கள் பார்வைக்கு வைக்கப்பட்டன.

Tamilnadu Librarians' Association

* 30 Q.—THIRU G. SWAMINATHAN : Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(a) whether it is a fact that the Tamilnadu Librarians' Association has requested the Government during March, 1971 to appoint a State Level Committee consisting of experienced Librarians to go into the question of all important matters connected with Library administration and Service conditions of employers working in Libraries; and

(b) if so the action taken by the Government in the matter?

தமிழ் நாடு நூலகர் சங்கம்

திரு. ஜி. சுவாமிநாதன்: மாண்புமிகு கல்வி-உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்:

(அ) நூலகங்களில் வேலை பார்க்கும் ஊழியர்களின் பணி சம்பந்தமாகவும் நூலக நிர்வாகம் சம்பந்தமாகவும் உள்ள எல்லா முக்கியப் பிரச்சினைகளையும் ஆலோசனை செய்து பார்ப்பதற்கென, அனுபவம் பெற்ற நூலகர்கள் அடங்கிய மாநில மட்டக் குழு ஒன்றை அமைக்குமாறு தமிழ் நாடு நூலகர் சங்கம், 1971 மார்ச் திங்களில் அரசிடம் முறையிட்டுள்ளது என்பது உண்மையா ?

(இ) ஆமெனில், அது குறித்து அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : (அ) ஆம்.

(ஆ) 1950-ஆம் ஆண்டு தமிழக பொது நூலக விதி 2 (1) பிரிவின்படி அமைக்கப்பட்டுள்ள மாநில நூலகக் குழு, நூலக நிர்வாகம் குறித்து அவ்வப்போது அரசுக்கு அறிவுரை கூறி தமிழக பொது நூலகச் சட்டம் 1948-ல் உள்ள சட்டப் பிரிவுகளை நடைமுறைப்படுத்த உதவிவர தமிழ்நாடு பொது நூலக விதி 1950, 7-வது பிரிவில் இடமிருப்பதாலும், நூலகப் பணியாளர்களின் பணிவரையறைகள், நூலக நிர்வாகம் ஆகியவற்றை கவனிக்க தமிழக நூலக பணியொன்றினை ஏற்படுத்துவது குறித்து அரசு பரிசீலனை செய்து வருவதாலும், இவை குறித்து இனி தனியொரு குழு நியமிக்க அவசியமில்லை.

திரு. ஜி. சுவாமிநாதன் : துணைத் தலைவர் அவர்களே, பல்கலைக் கழக மானியக் குழுவும் சென்னை அரசும் இந்த நூலகங்களுக்காக பணத்தை நிறைந்த அளவில் ஒதுக்கீடு செய்தாலும் கூட, கல்லூரியில் இருக்கிற நூலகங்களில் புத்தகங்களை வாங்கி